# அல்லாஹ்வுக்காக அன்பு பாராட்டுவோம்...!

எம்.ஏ.ஹபீழ் ஸலபி

இஸ்லாமிய நட்பியல் கோட்பாடு பரஸ்பரம் அன்பு, நேசம் கொள்வது கடமை என்பதோடு, அது அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும் என்று போதிக்கிறது.

அன்றாட வாழ்வில் பல நட்புகள் ஏற்படுவதுண்டு. ஆனால், அந்த நட்புகள் இறை நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்து காணப்படுவதில்லை.

நட்பு, நேசம், அன்பு அல்லாஹ்வுக்காக மாத்திரம் செலுத்தப்படும் உறவாக அமைதல் வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருளும் ஆசியும் எமக்குக் கிடைக்கும்.

பெரும்பாலான நண்பர்கள் வீணாகப் பேசுவது, ஊர் சுற்றுதுவது, திரையரங்குகளுக்குச் செல்வது போன்ற தீய காரியங்களில் ஒன்றுபடுகிறார்கள். அனைவரும் அல்லாஹ்வுடைய மார்க்கம் மேலோங்குவதற்காக ஒன்று கூடுவது அரிதிலும் அரிதாகிவிட்டது. இஸ்லாத்தை பரப்புவதற்காக அறிமுகமில்லாத பலரிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்தி நட்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இறைவனுக்காக நட்பு பாராட்டியவர்களுக்கு ஏராளமான சிறப்புகள் இருப்பதாக அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

سنن أبي داود (2/ 632)

4681 حدثنا مؤمل بن الفضل ثنا محمد بن شعيب بن شابور عن يحيى بن الحارث عن القاسم عن أبي أمامة : عن رسول الله صلى الله عليه و سلم أنه قال ' من أحب لله وأبغض لله وأعطى لله ومنع لله فقد استكمل الإيمان . "
قال الشيخ الألباني : صحيح

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். யார் அல்லாஹ்விற்காக நேசிக்கிறாரோ அல்லாஹ்விற்காக வெறுக்கிறாரோ அல்லாஹ்விற்காக கொடுக்கிறாரோ அல்லாஹ்விற்காக கொடுக்காமல் இருக்கிறாரோ அவர் ஈமானை பூரணப்படுத்திக்கொண்டார்.

அறிவிப்பவர் : அபூ உமாமா (ரலி), நூல் : அபூதாவூத் (4061)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் வேறொரு ஊரில் இருக்கும் தன் சகோதரனை சந்திப்பதற்காக ஒருவர் சென்றார். அவர் செல்லும் வழியில் ஒரு வானவரை அல்லாஹ் அவரிடத்தில் அனுப்பினான். அந்த வானவர் அவரிடத்தில் வந்தபோது நீங்கள் எங்கே செல்ல நினைக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர் இந்த ஊரில் உள்ள எனது சகோதரனை (சந்திக்க) நாடிச் செல்கிறேன் என்று கூறினார். உங்களுக்கு சொந்தமான எதையாவது அவர் உங்களுக்கு தர வேண்டியுள்ளதா? இல்லை. கண்ணியமானவனும் சங்கையானவனுமான அல்லாஹ்விற்காக அவரை நேசிக்கிறேன் என்று கூறினார். அந்த வானவர் நீங்கள் யாருக்காக அவரை நேசித்தீர்களோ அவன் உங்களை நேசிக்கிறான் என்பதை உங்களிடம் (கூற வந்த) அல்லாஹ்வின் தூதராவேன் நான் என்று கூறினார்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் : முஸ்லிம் (4656)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் விஷயத்தில் ஒருவருக்கொருவர் நேசித்துக் கொள்பவர்களுக்கும் என் விஷயத்தில் அமர்பவர்களுக்கும் என் விஷயத்தில்

போட்டி போட்டுக் கொண்டு செலவு செய்பவர்களுக்கும் எனது அன்பும் உறுதியாகிவிட்டது என்று அல்லாஹ் கூறுகிறான்.

அறிவிப்பவர் : முஆத் (ரலி), நூல் : அஹ்மத் (21114)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் மறுமை நாளில் எனக்காக நேசம் வைத்துக்கொண்டவர்கள் எங்கே? என்னுடைய நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத இந்நாளில் நான் அவர்களுக்கு எனது நிழலைத் தருகிறேன் என்று கூறுவான்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் : முஸ்லிம் (4655)

“அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இல்லாத (கியாமத்) நாளில் அல்லாஹ் தனது நிழலில் ஏழு பேருக்கு நிழல் வழங்குவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவர்கள்:

01. நீதமிகு தலைவர்

02. அல்லாஹ்தஆலாவின் வணக்கத்தில் வளர்ந்த ஒரு வாலிபர்.

03. மஸ்ஜித்களுடன் இதய பூர்வத் தொடர்பு கொண்ட மனிதர்.

04. அல்லாஹ்வுக்காக நேசித்து, அவனுக்காகப் பிரியும் இரு மனிதர்கள்.

05. அழகும், கவர்ச்சியுமிக்க பெண் (விபச்சாரத்திற்காக) அழைக்கும் போது, நான் அல்லாஹ்வை அஞ்சுகின்றேன் என்றுரைக்கும் மனிதன்.

06. தனது வலக்கரம் தர்மம் செய்வதை, இடக்கரம் அறியாதளவு இரகசியமாக செலவு செய்யும் மனிதன்.

07. தனிமையில் இறையச்சத்தில் ஈடுபடும் போது, (அல்லாஹ்வின்) அச்சத்தால் அழும் மனிதன்.“

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி 6806

அல்லாஹ்வின் அடியார்களில் சில மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் நபிமார்களும் அல்ல. இறைவனின் பாதையில் உயிர் நீத்தவர்களும் அல்ல. இவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் கிடைக்கும் அந்தஸ்த்தைப் பார்த்து நபிமார்களும் தியாகிகளும் பொறாமைப்படுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள் அவர்கள் யார் என எங்களுக்குக் கூறுங்கள் அல்லாஹ்வின் தூதரே என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் தங்களுக்கிடையே இரத்த உறவிற்காகவோ கொடுத்து வாங்கிக் கொள்ளும் செல்வங்களுக்காகவோ அல்லாமல் அல்லாஹ்விற்காக ஒருவரையொருவர் நேசித்துக் கொண்டவர்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நிச்சயமாக அவர்களுடைய முகங்கள் ஒளியாக இருக்கும். அவர்கள் ஒளியின் மீது இருப்பார்கள். மக்கள் அஞ்சும் போது அவர்கள் அஞ்சமாட்டார்கள். மக்கள் கவலைப்படும் போது அவர்கள் கவலைப்படமாட்டார்கள் என்று கூறிவிட்டு அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்த பயமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள் என்ற வசனத்தை படித்துக் காட்டினார்கள்.

அறிவிப்பவர் : உமர் பின் அல்கத்தாப் (ரலி), நூல் : அபூதாவுத் (3060)

நாம் முதலில் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்க வேண்டும். இதுவே,ஈமானின் வெளிப்பாடாக உள்ளது.

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ(31) سورة آل عمران

"நீங்கள் அல்லாஹ்வை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள்! அல்லாஹ் உங்களை விரும்புவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பவன்ளூா நிகரற்ற அன்புடையோன் என்று கூறுவீராக! (அல்குர்ஆன் 3:31)

மற்ற அனைவரையும் விட அல்லாஹ்வும் அவனது தூதரும் எமக்கு மிகப் பிரியமானவர்களாக இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் அன்பு கொள்வதென்பது வேதத்தையும், தூதரின் வாழ்வையும், வாக்கையையும் பின்பற்றுவதிலேதான் இருக்கிறது.

அதேபோல் அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தவே மற்றவர் மீது அன்பு செலுத்த வேண்டும்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ ثَلَاثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلَاوَةَ الْإِيمَانِ أَنْ يَكُونَ اللَّهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لَا يُحِبُّهُ إِلَّا لِلَّهِ وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الْكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ رواه البخاري

மூன்று விடயங்கள் யாரிடம் இடம் பெறுகின்றனவோ அவர் ஈமானின் சுவையைப் பெற்றுக்கொள்வார்.

1. அனைவரையும் விட அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒருவருக்கு மிக அன்புள்ளவர்களாக இருத்தல்.

2. அல்லாஹ்வுக்காகவே பிறரை நேசித்தல்.

3. இறை நிராகரிப்பை விட்டு அல்லாஹ் அவரை நீக்கி ஈடேற்றம் அடையச் செய்த பின், மீண்டும் அந்த நிராகரிப்பின் பக்கம் திரும்புவதை, தம்மை நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பதைப் போன்று வெறுப்பர் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரழி), நூல்: புகாரி (16), முஸ்லிம்

அல்லாஹ்வைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் நாம் ஒருவருடன் தொடர்பு வைத்துக் கொண்டால் இன்பத்திலும், துன்பத்திலும், ஏழ்மையிலும் செழுமையிலும் அந்த உறவு நிலைத்து நிற்கும்.

எப்போதும் அது நன்மை பெற்றுத்தரும் ஒரு வணக்கமாக (இபாதத்தாக) அமையும். அது என்றும் களங்கப்படாத அன்பாக நிலைத்து நீடித்து வாழும்.

அல்லாஹ்வுக்காக ஒருவரை ஒருவர் நேசம் கொள்ளும் போது, அவர்களது ஈமான் சுவையானதாகவும், அர்த்தமுள்ளதாகவும், பொருள் பொதிந்ததாகவும் மாறிவிடுகிறது.

அல்லாஹ்வையும், தூதரையும், இறை விசுவாசிகளையும் நண்பர்களாய் ஆக்கிக்கொள்ளாதவர்கள் இறுதியில் கைசேதத்தை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள், எனவே தான் நபி (ஸல்) அவர்கள் நட்புத் தேடலில் ஈமானை முதன்மைப்படுத்தியுள்ளார்கள்.

أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ مِنْ عِبَادِ اللَّهِ لَأُنَاسًا مَا هُمْ بِأَنْبِيَاءَ وَلَا شُهَدَاءَ يَغْبِطُهُمُ الْأَنْبِيَاءُ وَالشُّهَدَاءُ يَوْمَ الْقِيَامَةِ بِمَكَانِهِمْ مِنْ اللَّهِ تَعَالَى قَالُوا يَا رَسُولَ اللَّهِ تُخْبِرُنَا مَنْ هُمْ قَالَ هُمْ قَوْمٌ تَحَابُّوا بِرُوحِ اللَّهِ

عَلَى غَيْرِ أَرْحَامٍ بَيْنَهُمْ وَلَا أَمْوَالٍ يَتَعَاطَوْنَهَا فَوَاللَّهِ إِنَّ وُجُوهَهُمْ لَنُورٌ وَإِنَّهُمْ عَلَى نُورٍ لَا يَخَافُونَ إِذَا خَافَ النَّاسُ وَلَا يَحْزَنُونَ إِذَا حَزِنَ النَّاسُ وَقَرَأَ هَذِهِ الْآيَةَ أَلَا إِنَّ أَوْلِيَاءَ اللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ رواه أبوداود

தங்களுக்குள் இரத்த பந்தம் இல்லாதிருந்த போதும், தங்களுக்குள் சொத்துக்களைப் பங்கு வைத்திடும் பாக்கியம் இல்லாத போதும் அல்லாஹ்வுக்காகவே ஒருவரை ஒருவர் நேசித்தவர்கள், ஒளிக்கற்றைகள் அவர்களின் முகங்களிலிருந்து பாய்ந்து வரும், அந்த ஒளியின் வழியில் அவர்கள் நடப்பார்கள் மக்கள் அச்சத்தால் நடுங்கிக்கொண்டிருக்கும் நேரம் அவர்களுக்கு அச்சமில்லை. மக்கள் துக்கத்தால் சோகித்து நிற்கும்போது, அவர்களுக்குத் துக்கம் ஏதுமில்லை. (ஆதாரம் : அபூதாவூத் :3060)

அல்லாஹ்வுக்குச் சொந்தமான நல்லடியார்களுக்கு நிச்சியமாக யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள் என்பதை நீங்கள் (உறுதியாக) அறிந்து கொள்ளுங்கள் என அல்லாஹ் கூறுகிறான். (அல்குர்ஆன் 10:62)

நாம் பாராட்டும் நட்பு அல்லாஹ்வுக்காக மாத்திரம் இருந்திடும்போது, அது அல்லாஹ்வை முழுமையாக விசுவாசித்ததாக அமைந்து விடுகிறது.

حَدَّثَنَا قُتَيْبَةُ بْنُ سَعِيدٍ عَنْ مَالِكِ بْنِ أَنَسٍ فِيمَا قُرِئَ عَلَيْهِ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ بْنِ مَعْمَرٍ عَنْ أَبِي الْحُبَابِ سَعِيدِ بْنِ يَسَارٍ عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ اللَّهَ يَقُولُ يَوْمَ الْقِيَامَةِ أَيْنَ الْمُتَحَابُّونَ بِجَلَالِي الْيَوْمَ أُظِلُّهُمْ فِي ظِلِّي يَوْمَ لَا ظِلَّ إِلَّا ظِلِّي رواه مسلم

எனக்கா நட்புகொண்டவர்கள் எங்கே? இன்று நான் அவர்களுக்கு என்னுடைய நிழலில் இடமளிப்பேன். இன்று என்னுடைய நிழலைத்தவிர வேறு நிழல் கிடையாது என்று மறுமையில் அல்லாஹ் கூறுவான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம் : 5015